**திருமங்கையாழ்வார் அருளிச் செய்த**
**பெரிய திருமொழி**
**ஒன்பதாம் பத்து**

**இரண்டாம் திருமொழி - பொன்னிவர்**
**திருநாகை**
**[தலைவனது உருவெளிப்பாடு கண்ட தலைவி தோழிக்குக் கூறிய பாசுரம்]**

** பொன் இவர் மேனி மரதகத்தின் *
பொங்கிளம் சோதி அகலத்து ஆரம்
மின் * இவர் வாயில் நல் வேதம் ஓதும் *
வேதியர் வானவர் ஆவர் தோழீ! **
என்னையும் நோக்கி என் அல்குலும் நோக்கி *
ஏந்து இளம் கொங்கையும் நோக்குகின்றார் *
அன்னை என் நோக்கும் என்று அஞ்சுகின்றேன் *
அச்சோ ஒருவர் அழகியவா! 1

தோடவிழ் நீலம் மணம் கொடுக்கும் *
சூழ் புனல் சூழ் குடந்தைக் கிடந்த *
சேடர் கொல் என்று தெரிக்க மாட்டேன் *
செஞ்சுடர் ஆழியும் சங்கும் ஏந்தி **
பாடக மெல்லடியார் வணங்கப் *
பன்மணி முத்தொடு இலங்கு சோதி *
ஆடகம் பூண்டொரு நான்கு தோளும் *
அச்சோ ஒருவர் அழகியவா! 2

வேய் இருஞ்சோலை விலங்கல் சூழ்ந்த *
மெய்ய மணாளர் இவ்வையம் எல்லாம் *
தாயின நாயகர் ஆவர் தோழீ! *
தாமரைக் கண்கள் இருந்தவாறு **
சேய் இருங்குன்றம் திகழ்ந்தது ஒப்பச் *
செவ்வியவாகி மலர்ந்த சோதி *
ஆயிரம் தோளொடு இலங்கு பூணும் *
அச்சோ ஒருவர் அழகியவா! 3

வம்பவிழும் துழாய் மாலை தோள் மேல் *
கையன ஆழியும் சங்கும் ஏந்தி *
நம்பர் நம் இல்லம் புகுந்து நின்றார் *
நாகரிகர் பெரிதும் இளையர் **
செம்பவளம் இவர் வாயின் வண்ணம் *
தேவர் இவரது உருவம் சொல்லில் *
அம்பவளத் திரளேயும் ஒப்பர் *
அச்சோ ஒருவர் அழகியவா! 4

கோழியும் கூடலும் கோயில் கொண்ட *
கோவலரே ஒப்பர் குன்றம் அன்ன *
பாழி அந்தோளும் ஓர் நான்குடையர் *
பண்டு இவர் தம்மையும் கண்டறியோம் **
வாழியரோ இவர் வண்ணம் எண்ணில் *
மாகடல் போன்றுளர் கையில் வெய்ய *
ஆழி ஒன்று ஏந்தி ஓர் சங்கு பற்றி *
அச்சோ ஒருவர் அழகியவா! 5

வெஞ்சின வேழம் மருப்பொசித்த *
வேந்தர் கொல்? ஏந்திழையார் மனத்தை *
தஞ்சுடையாளர் கொல்? யான் அறியேன் *
தாமரைக் கண்கள் இருந்தவாறு **
கஞ்சனை அஞ்ச முன் கால் விசைத்த *
காளையர் ஆவர் கண்டார் வணங்கும் *
அஞ்சன மாமலையேயும் ஒப்பர் *
அச்சோ ஒருவர் அழகியவா! 6

பிணி அவிழ் தாமரை மொட்டலர்த்தும் *
பேரருளாளர் கொல்? யான் அறியேன் *
பணியும் என் நெஞ்சம் இதென் கொல்? தோழீ! *
பண்டு இவர் தம்மையும் கண்டறியோம் **
அணி கெழு தாமரை அன்ன கண்ணும் *
அங்கையும் பங்கயம் மேனி வானத்து *
அணி கெழு மாமுகிலேயும் ஒப்பர் *
அச்சோ ஒருவர் அழகியவா! 7

மஞ்சுயர் மாமதி தீண்ட நீண்ட *
மாலிருஞ்சோலை மணாளர் வந்து * என்
நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்கார் *
நீர்மலையார் கொல்? நினைக்க மாட்டேன் **
மஞ்சுயர் பொன்மலை மேல் எழுந்த *
மாமுகில் போன்றுளர் வந்து காணீர் *
அஞ்சிறைப் புள்ளும் ஒன்று ஏறி வந்தார் *
அச்சோ ஒருவர் அழகியவா! 8

எண்திசையும் எறி நீர்க் கடலும் *
ஏழுலகும் உடனே விழுங்கி *
மண்டி ஓர் ஆலிலைப் பள்ளி கொள்ளும் *
மாயர் கொல்? மாயம் அறிய மாட்டேன் **
கொண்டல் நன்மால் வரையேயும் ஒப்பர் *
கொங்கலர் தாமரைக் கண்ணும் வாயும் *
அண்டத்து அமரர் பணிய நின்றார் *
அச்சோ ஒருவர் அழகியவா! 9

** அன்னமும் கேழலும் மீனும் ஆய *
ஆதியை நாகை அழகியாரை *
கன்னி நன்மாமதிள் மங்கை வேந்தன் *
காமரு சீர்க் கலிகன்றி ** குன்றா
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை *
ஏழும் இரண்டும் ஒரொன்றும் வல்லார் *
மன்னவராய் உலகாண்டு * மீண்டும்
வானவராய் மகிழ்வு எய்துவரே 10

**அடிவரவு:** பொன் தோடு வேய் வம்பு கோழி வெஞ்சினம் பிணி மஞ்சுயர் எண்திசை அன்னம் தன்னை

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---